**செ. கு. எண்: 095** **நாள்:12.07.2016**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 12.7.2016

4.3.2016 அன்று சென்னை பெருநகர காவல், புனித தோமையர்மலை, சேலையூர் சரகத்தில் உதவி ஆணையராகப் பணி புரிந்த திரு. K.K. முருகேசன்;

9.3.2016 அன்று புதுக்கோட்டை மாவட்டம், ஏம்பல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. C.சவரிமுத்து;

கோயம்புத்தூர் மாநகரம், சாய்பாபா காலனி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. R.கோபால்சாமி;

10.3.2016 அன்று சேலம் மாநகர அரசு மருத்துவமனை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. K.கணேசன்;

10.4.2016 அன்று திருநெல்வேலி மாவட்டம், தென்காசி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. துரைபாண்டியன்;

14.4.2016 அன்று சிவகங்கை நகரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஆய்வாளராகப் பணி புரிந்த திருமதி குமாரி;

15.4.2016 அன்று தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்த திரு. A.சிவசுப்பிரமணியன்;

17.4.2016 அன்று திருவள்ளூர் மாவட்டம், மப்பேடு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்த திரு. A.K.ஸ்ரீனிவாசன்;

21.4.2016 அன்று கோயம்புத்தூர் மாநகரம், குனியமுத்தூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்த திரு. குமரன்;

24.4.2016 அன்று சென்னை பெருநகர காவல், அசோக் நகர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்த திரு. E.கிளாரன்ஸ் ஜெயகரன்;

26.4.2016 அன்று அரியலூர் மாவட்டம், திருமானூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்த திரு. பொய்யாமொழி;

26.4.2016 அன்று திருநெல்வேலி மாநகரம், மேலப்பாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. முகமதுகான்;

27.4.2016 அன்று விழுப்புரம் மாவட்டம், பகண்டை கூட்டு சாலை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. P.சங்கர்;

28.3.2016 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், புதுப்பட்டினம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. K.சிவக்குமார்;

––– ஆகியோர் உடல்நலக் குறைவால் காலமானார்கள் என்ற செய்தியையும்;

4.3.2016 அன்று விழுப்புரம் மாவட்டம், சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. J.வைத்தியநாதன்;

15.3.2016 அன்று சென்னை பெருநகர காவல், ஆயுதப்படை – 1, இ–நிறுமம், 30-ம் அணியில் காவலராகப் பணி புரிந்த திரு. B.சிவசங்கர்;

21.3.2016 அன்று சேலம் மாநகரம், இரும்பாலை காவல் நிலையத்தில் காவலராகப் பணி புரிந்த திரு. G.ராஜா;

23.3.2016 அன்று சென்னை பெருநகர காவல், மாதவரம் காவல் நிலைய போக்குவரத்துப் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. D.மகாலிங்கம்;

26.3.2016 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. K.S.ரவிச்சந்திரன்;

6.4.2016 அன்று தருமபுரி மாவட்டம், பாலக்கோடு காவல் நிலையத்தில், சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. N.முத்துலிங்கம்;

14.4.2016 அன்று சேலம் மாநகரம், சூரமங்கலம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்த திரு. R.சாம்பசிவம்;

——— ஆகியோர் சாலை விபத்துகளில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

12.4.2016 அன்று விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்த திரு. N.ராஜேந்திரன் அவர்கள் தண்ணீர் தொட்டியில் தவறி விழுந்ததில், பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

30.4.2016 அன்று திருவண்ணாமலை மாவட்ட ஆயுதப்படை 3-ம் பிரிவில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணி புரிந்த திரு. ஜெயக்குமார் அவர்கள் அலுவலகத்திற்கு வந்து கொண்டிருந்த போது மயக்கம் ஏற்பட்டு கீழே விழுந்ததில் பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **23** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9**